# திருமந்திரத்தில் கரு உற்பத்தி – ஓர் அறிவியல் பார்வை

**இரா.சந்துரு & முனைவர் தி.பார்த்திபன்,**
**மெய்யியல் துறை,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–10.**
**மின்னஞ்சல் : chandruvv148@gmail.com**

29

**ஆய்வுச்சுருக்கம்**

நம் பாரத மண்ணில் பல ஆண்டுகளாக மக்கள் நலமுடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து வருகின்றனர். இதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பது, உணவும் மருத்துவமும் ஆகும். நமது நாட்டில் மரபு சார்ந்த பழைய மருத்துவ முறைகள் உள்ளன. அவை சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம், தமிழ் மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி மற்றும் ஆங்கில மருத்துவ முறைகள் ஆகும். ஆனால் நாம் தொன்றுதொட்டு தமிழ் மருத்துவமுறைகளை சற்று அதிகமாகப் பின்பற்றி வருகிறோம். இதற்குக் காரணம் நம் இலக்கிய நூல்கள் அனைத்திலும் அன்றாட வாழ்வியல் எளிமையான மருத்துவக் குறிப்புகள் மற்றும் உணவு முறைகளை நம் சான்றோர்கள் நமக்கு அளித்துள்ளனர். இதனை எடுத்துக் காட்டும் விதமாக திருமந்திரத்தில் **கரு உற்பத்தி** என்னும் தலைப்பின் கீழ் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

கரு உற்பத்தி, பிராணன் (காற்று), குரோமோசோம்கள், XX (பெண்), XY (ஆண்), கருமுட்டை, சுக்கிலம், சுரோணிதம், கர்ப்பப்பை, கர்ப்பக்கிரகம், ஆரோக்கியம்

**முன்னுரை**

இப்பூமியில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் தன்னைக் காத்துக் கொள்வதும் சந்ததியை உருவாக்குவதும் வழக்கமாகும். இதன் அடிப்படையில் ஒவ்வொரு உயிரினமும் வாழ்ந்து வருகின்றன. இம்மனித இனம் நன்றாக வாழவும் வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி மற்ற உயிரினங்களுக்கும் இயற்கைக்கும் தீங்கில்லாமல் வாழ்வதற்காக உருவாக்கப்பட்டது. பக்தி நூல்களும், நீதிநெறி நூல்களும் ஆகும். ஆனால் அறிவியல் உபகரணங்கள் இல்லாத அக்கால கட்டத்திலேயே மனிதன் ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து வந்தான். இதற்குக் காரணம், இயற்கையை உணர்ந்து நீதிநெறி தவறாமையே. இன்று அறிவியலில் அளப்பரிய வளர்ச்சியில் மனித இனம் பயணித்து வருகிறது. ஆனால், இச்சூழலில் மனிதனின் ஆரோக்கியம் என்பதை சிந்தித்துப் பார்க்கையில் சற்று குறைவாகவே உள்ளது. எனவே, நாம் அறிவியலின் துணைகொண்டு நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியில் உள்ள தமிழ் மருத்துவ முறைகளையும் உணவு முறைகளையும் அன்றாட வாழ்வில் எடுத்துக்கொள்வதன் மூலம் மீண்டும் நம் முன்னோர்களைப் போல ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ முடியும். மேலும் நமது சந்ததியினரை வலுவுள்ளோராக உருவாக்க முடியும்.

**திருமந்திரம் ஓர் அறிமுகம்**

திருமூலரின் திருமந்திரம் சைவத் திருமுறை பன்னிரண்டில் பத்தாவதாக மலர்ந்தது. இந்நூலை தான் படைத்ததற்கான காரணமாக

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே[1]**

என்று வெளிப்படுத்துகிறார் திருமூலர்.

சிவபெருமானின் ரூப-அரூப வடிவான நந்தி தேவனிடம் நேரடியாக தீட்சை பெற்றவர். சிவயோகம் எனும் யோக நெறியின் வழியே மெய்ஞானம் கண்டவர் உடலின் உள்ளே இருக்கும் உயிர் சக்தியை, இறை சக்தியை எழுப்பி இறவா நிலையை அடைந்தார். ஜோதி வடிவான ஈசனுடன் கலந்து ஆனந்தத்தை அனுபவித்தவர். தான் பெற்ற இந்த இன்ப நிலையை உலகத்தில் உள்ளோரெல்லாம் உய்ய வேண்டும் என்ற திருமூலரின் அவாவில் உருவானதே திருமந்திரம்.

திரு + மந்திரம் = திருமந்திரம். மந்திரம் என்பதன் பொருள் நிறைமொழி. மந்திரம் - மாந்திரம் என்ற சொல்லிலிருந்து திரிந்தது. மாந்திரம் என்றால் உள்வாங்கி கொள்ளுதல். அதாவது நிறைமொழியை உள்வாங்குபவன் எனப் பொருள்படும். திரு அடைமொழி ஏற்று திருமந்திரம் ஆனது. திருமந்திரத்தின் வேறு பெயர்கள் திருமந்திரமாலை, தமிழ்ச்சாத்திரம், தமிழ் ஆகமம், திருமந்திரவேதம், வேதாகமம் ஆகும்.

இறைநூல் இருவகைப்படும். 1. புகழ்நூல், 2. பொருள்நூல்
புகழ்நூல் - தோத்திரம் - பக்தி மார்க்கம்
பொருள்நூல் - சாத்திரம் - அறிவுமார்க்கம்

இந்த இரண்டு மார்க்கமும் உள்ள நூல் திருமந்திரம்.

திருமந்திரம் அள்ள அள்ளக் குறையாத ஒரு அட்சய பாத்திரம். வாழ்க்கை நெறிகளை உணர்த்தும் ஒரு வாழ்வியல் நூல். யோக நெறிகளை விளக்கும் யோக சூத்திரம், தந்திர வழிகளை உணர்த்தும் தந்திர நூல், சூட்சும ரகசியங்களை கூறும் ஒரு ஆகமம். ஈசனைப் பாடும் திருமுறை என திருமந்திரத்தில் பல பரிமாணங்கள் உள்ளன.

திருமந்திரத்தில் யோக பயிற்சிக்கான வழிமுறைகள், உடலிலுள்ள சக்கரங்கள், அவற்றின் இயக்கங்கள், நாடிகள், தசவாயுக்கள், பஞ்சபூதங்கள், சித்திகள், கரு உற்பத்தி எனப் பல சூட்சும ரகசியங்கள் திருமந்திரத்தில் மூழ்கிப் பார்க்கலாம்.

**திருமூலர் - வரலாறு**

திருக்கயிலாயத்திலே சிவபெருமானிடத்திலும் நந்தியெம்பெருமானிடத்திலும் உபதேசம் பெற்ற ஒருவர் அகத்தியரிடம் பேரன்பு கொண்டவராக விளங்கினார். தம் அன்பிற்குரிய அகத்தியரைக் காணும்பொருட்டுத் தென்திசை நோக்கிச் செல்வாராயினர். வரும் வழியெல்லாம் திருத்தலங்களைத் தரிசித்து சோழநாட்டில் திருவாவடுதுறைப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். ஒருநாள் அங்குள்ள காவிரியில் நீராடி இறைவழிபாட்டிற்கு வரும் வழியில் காவிரிக்கரையில் பசுக்கூட்டங்கள் கதறுவதையும் அருகில் அவற்றை மேய்க்கும் இடையன் இறந்து கிடப்பதையும் கண்டார். பசுக்கூட்டமெல்லாம் அவனைச் சுற்றி நின்று கண்ணீர் விட்டன.

பசுக்களின் துயரங்கண்டு மனமிரங்கிய சிவயோகி அவற்றின் துயர்களையத் திருவுளங் கொண்டார். தமது உடலை மறைவாக ஒரு மரப்பொந்தில் கிடத்திவிட்டு அஷ்டமாச் சித்துகளில் ஒன்றான கூடுவிட்டு கூடுபாய்தல் எனும் சித்தின் வழித் தம் உயிரை இடையனான மூலனின் உடம்பினுள் புகுத்தினார். இறந்து கிடந்த உடல் உயிர்பெற்றது. மூலன் எழுந்ததும் பசுக்கள் அவனை நாவால் நக்கி மகிழ்ந்தன. வயிறார மேய்ந்து மாலையில் வீடுநோக்கிச் சென்றன. பசுக்கள் அத்தனையும் அருகிலிருந்த சாத்தனூரைச் சார்ந்தவையாகும். பசுக்கூட்டங்களுடன் சென்ற சிவயோகி அவற்றை ஊரினுள் ஓட்டிவிட்டு ஊர் எல்லையில் உள்ள சாவடியில் நிற்பாராயினர்.

பசுக்கள் திரும்பியும் மூலனைக் காணாத அவன் மனைவி கணவனைத் தேடிவந்தாள். தம் கணவன் உடலுள் தவயோகி இருப்பதை அறியாமல் வீட்டிற்கு அழைத்தாள் அவர் மறுக்கவே ஊர்ப் பெரியோரிடம் முறையிட்டாள். அவர்களும் மூலனின் மனைவியுடன் சென்றனர். அவர்களிடம் நிகழ்ந்த நிகழ்வுகளைக் கூறிய சிவயோகி மீண்டும் மூலனின் உடலைச் செயலற்றதாக்கி நிரூபித்தார். ஊர்ப் பெரியவர்கள் மூலனின் மனைவியைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்றனர். பின் தன் உடலை விட்ட இடத்திற்குச் சிவயோகியார் சென்றார். அங்கு அது இல்லாததைக் கண்ட சிவயோகியார் அனைத்தும் எம்பெருமானின் திருவுள்ளமே எனத் தெளிந்து மூலனின் உடம்பிலேயே திருமூலர் எனும் பெயருடன் விளங்கினார். திருவாவடுதுறைத் திருக்கோயிலின் அருகிலிருந்த படர் அரசின் கீழிருந்து ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களைப் பாடியருளினார். அதுவே திருமந்திரம் என வழங்கப்படுகிறது.

**இரண்டாம் தந்திரத்தில் - கரு உற்பத்தி**

25 தலைப்புகள், அகத்தியம், பதிவலியில் வீரட்டம் எட்டு, இலிங்க புராணம், தக்கன் வேள்வி, பிரளயம், சக்கரப்பேறு, எலும்பும் கபாலமும், அடிமுடி தேடல், படைப்பு, காப்பு, மறைப்பு, அருளல், **கர்ப்பக்கிரியை,** மூவகைச் சிவவர்க்கம், பாத்திரம், அபாத்திரம், தீர்த்தம், திருக்கோயிலிழிவு, அதோமுக தரிசனம், சிவநிந்தை, குருநிந்தை, மகேச்சுர நிந்தை, பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் 208 பாடல்கள் உள்ளன.

**திருமந்திரத்தில் கர்ப்பக்கிரியை**

**ஆக்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்சு**
**ஆக்குகின் றான்அவன் ஆதிஎம் ஆருயிர்**
**ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை உள்ளிருந்(து)**
**ஆக்குகின் றான்அவன் ஆவ(து) அறிந்தே**[2]

இந்தப் பாடலில் இருந்து ‘ஆக்குகின்றான் முன்பிரிந்த இருபத்தைஞ்சு’ என்று தொடங்குகிறார். ஆக்குகின்றான் என்பது புரிகிறது. முன்பிரிந்த என்பது புரிகிறது அது என்ன இருபத்தைந்து? ஐம்பூதங்கள் என்றால் எளிதாக நமக்குத் தெரியும். ஆனால் இருபத்தைந்து? ஆன்மீகத்தின்படி பொறி ஐந்து, புலன் ஐந்து, பெரும்பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, இவற்றுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆன்மா எனப்படும் ஐந்து சேர்ந்தால் இருபத்தைந்து என்று சொல்வதுண்டு

ஒரு குழந்தையை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகிப்பது குரோமோசோம்கள்தான் 23 ஜோடி குரோமோசோம்கள்தான் இருக்கிறது. 22 பேர் ஜெனரல், 23-வது ஜோடியில் ஆணாக

இருந்தால் எக்ஸ் மற்றும் ஒய். பெண்ணாக இருந்தால் 2 எக்ஸ். இந்த 22 என்பது இரண்டாகப் பிரிந்து ஒரு பாதி பெண்ணில் இருந்து வரும் இன்னொரு பாதி ஆணில் இருந்து வரும். இதில் இருந்து 22 குரோமோசோம்கள் கட்டாயம் வேண்டும் என்பதை அறியமுடியும்.

அடுத்து 2 எக்ஸ், 1 ஒய் இந்த மூன்றுக்குள்ளதான் போட்டி. இதில் 2 எக்ஸ் சேர்ந்தா பெண்ணாக உருவாகிறது. 1 எக்ஸ் 1ஒய் சேர்ந்தா ஆணாக உருவாகிறது. பெண்ணிடம் இருந்து எப்போதுமே எக்ஸ் வந்துகொண்டே இருப்பதுண்டு. ஏனென்றால் பெண்ணினுடைய குரோமோசோம்ஸ் 2 பகுதியாக பிரியும்போது 22 ஜெனரல் குரோமோசோம் + ஒரு எக்ஸ். ஆனால் ஆணிடம் இருந்து வரும்பொழுது அந்த விந்தணுவில் ஒரு பாதி அணுவில் வந்து 22 ஜெனரலும் எக்ஸ்-ம் இருக்கும். இன்னொரு பாதியில் 22 ஜெனரலும் ஒரு Yம் இருக்கும். இந்த வித்தியாசத்தினால்தான் ஆண் விந்தணு, பெண் விந்தணு எனப் பிரித்து பார்க்க முடிகிறது. இப்போது எல்லோருக்குமே ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்து இருக்கும். அதாவது ஒரு குடும்பத்தில் தொடர்ந்து பெண் குழந்தை பிறக்கிறது என்றால், அதுக்கு காரணம் பெண் இல்லை. அந்த குடும்பத்து ஆண் மட்டுமே காரணம். 22 + 2 எக்ஸ் +1 ஒய் = 25 என்று இந்த இருபத்தைந்து குரோமோசோம்கள் இருந்தால் மட்டுமே ஒரு பிறப்பு நிகழ முடியும் என்பதைத்தான் அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார் திருமூலர்.

**முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்**
**இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்**
**பட்டது பார்மணம் பன்னிரண்டு ஆண்டினில்**
**கெட்டது எழுபதில் கேடு அறியீரே**[3]

கர்ப்பம் என்பது பத்து மாதம் அவ்வளவுதான். ஆனால் டாக்டர்களிடம் கேட்டால் 280 நாட்கள் என்று சொல்வார்கள். இந்த 280 நாளை பத்து மாதம் என்று சொல்லக்கூடாது. பத்து மாதம் என்றால் 300 நாட்கள். அப்படி என்றால் கிராமத்து மக்கள் சொல்லும் 300 நாள் என்பது சரியா ? அல்லது மருத்துவர்கள் சொல்லும் 280 நாள் சரியா? இரண்டுமே சரிதான். அது எப்படி என்பதுதான் திருமூலரின் இந்த பாடல்.

முட்டை பிறந்தது 300 நாளினில் என்றுதான் திருமூலர் சொல்லி இருக்கிறாரே தவிர குழந்தை பிறந்தது 300 நாளில் என்று சொல்லவில்லை. இந்த மாதம் ஒரு பெண்ணுக்கு மாதவிலக்கு ஏற்படுகிறது. அந்த தினத்தில் இருந்து 15-வது நாள் கருமுட்டை வெளிப்படும். வெளிப்பட்ட கருமுட்டை கருவான பிறகு 265 நாள் கழித்து முழுமையான குழந்தையாக வெளிவரும். இந்த 265 நாளும் 15 நாளும் சேர்ந்து 280-ன்னு சொல்றோம். ஆனால் மாதவிலக்கு வெளிப்படும் அன்றுதான் முட்டை வெளியே வருகிறது என்று அர்த்தம் இல்லை.

அதாவது கர்ப்பத்தின் 280 நாட்களும், முட்டை தயாராகும் 15 முதலான 20 நாட்களும் சேர்த்தால் 300 நாட்கள். இப்படி முந்நூறு நாட்களில் வெளியாகும் முட்டையானது பன்னிரெண்டு வயதினில் முதிர்ச்சி அடைகிறது என்கிறார். இதைத்தான் ஒரு பெண் 12 வயதில் பூப்பு அடைகிறாள் என்று கணக்கிடுகிறோம். அந்த வயதில்தான் ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு ஓரளவு முதிர்ச்சி உண்டாகிறது.

**குழவியும் ஆணாம் வலத்தது ஆகில்**

**குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகில்**
**குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்**
**குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே[4]**

இந்த பாடலுக்கு வலது மூக்கின் வழி மூச்சுக்காற்று சென்றால் ஆண் குழந்தை என்றும், இடது மூக்கின் வழி சென்றால் பெண் குழந்தை என்றும், திருமூலர் சொல்லியிருக்கிறார் என்று ஆன்மீகப் பெருமக்கள் விளக்கம் சொல்வார்கள். நான் ஒரு மகப்பேறு மருத்துவர் என்பதால், இதற்கு இன்னொரு கோணத்தில் விஞ்ஞான விளக்கத்தை சொல்ல விரும்புகிறேன்.

பெண்களுக்கு கருமுட்டை வலதுபக்கம் உருவாகும்போது, அந்த கருமுட்டை ஆண் குழந்தையாக சினைப்பட வாய்ப்பு அதிகம். இந்த குழந்தை ஆண் அல்லது பெண் என்பது ஆணின் உயிரணுவின் தன்மையைப் பொறுத்த விஷயம். இந்த ஆண்-பெண் சங்கமத்தில் ஆண் உயிரணு அதிகமாக இருக்கும்போது அதாவது ஆணின் ஒய் குரோமோசோம் இருப்பது ஒரு பங்கு. பெண்ணின் எக்ஸ் குரோமோசோம் இருப்பது மற்றொரு பங்கு.

இந்த ஒய் குரோமோசோம்கள் வலதுபக்கம் கருமுட்டை நோக்கி வேகமாக நீந்திச் சென்று உருவானால் பெருவாரியாக ஆண் குழந்தை உண்டாக வாய்ப்பு இருக்கும். அதுபோலவே எக்ஸ் குரோமோசோம்கள் இடதுபக்கம் பாய்ந்து சென்று கருமுட்டையுடன் சேர்ந்தால் பெண் குழந்தை உருவாகிறது. எனவேதான் குழந்தை ஆணா, பெண்ணா என்பதற்கு ஆண் மட்டுமே முதல் காரணமாக இருக்கிறான். இதையே திருமூலர் வலத்தது ஆண் என்றும், இடத்தது பெண் என்றும் சொல்லியிருக்கிறார்.

**இட்டார் அறிந்திலர் ஏற்றவர் கண்டிலர்**
**தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்**
**பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்**
**கெட்டேன்இம் மாயையின் கீழ்மையெவ் வாறே.[5]**

1996-ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டு மருத்துவ விஞ்ஞானி ஒருவர் வலதுபுற ஓவரியில் இருந்து கருமுட்டை வரும்பொழுது அந்த எப்படி நகருகிறது என்பதை புளோரோசென்ட் மைக்ரோஸ்கோப் மூலமாகக் காட்டினார். அதாவது கணினியில் பார்க்கும்பொழுது அந்த ஒய் விந்தணு வலது பக்கம் நகர்ந்து போவதையும், எக்ஸ் விந்தணு இடது பக்கம் நகர்ந்து போவதையும் ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டினார். கருமுட்டை இடதுபக்கம் உருவானால், எந்த விந்தணுவும் வலதுபக்கம் போவதில்லை. கருமுட்டையால் ஈர்க்கப்பட்டுத்தான் இந்த விந்தணு நகர்ந்து கர்ப்பப்பைக்கு நகர்கிறது.

அதனால் கர்ப்பகம், கருவகம், கர்ப்பகிரகம் என்று சொல்கிறார்கள். விந்தணு மிகவும் நுண்ணியதாக இருந்தால் கூட, நீந்தி உள்ளே போக முடியாது. ஏனென்றால் கர்ப்பப்பை அத்தனை தூரம் பாதுகாக்கப்பட்ட இடம், கர்ப்பப்பையினால் ஈர்க்கப்பட்டு அந்த விந்தணு நகர்கிறது என்பது சரி, இதை இயக்கும் சக்தி எது? எல்லாமே அந்த மெய்ப்பொருளின் சக்திதான். நமக்கும் தெரியாத அந்த சக்தி அதாவது நாம் இன்னதென்று அறிந்துகொள்ள முடியாத அந்த சக்தியினால் தான் எல்லாமே நடக்கிறது.

அதனால்தான் திருமூலர் கர்ப்பப்பையில் நுழைந்திருக்கும் உயிர் ஆண்குழந்தை அல்லது பெண் குழந்தை என்பது பெற்றெடுக்கப் போகும் பெண்ணிற்குத் தெரியாது. உயிரணுவை வழங்கிய ஆணுக்கும் தெரியாது. ஆனால், உயிர்களை உருவாக்கும் பிரம்மாவுக்குத்தான் அது தெரியும். ஆனால், அவர் சொல்ல மாட்டார். இத்தனை சிருஷ்டி ரகசியத்துக்கும் காரணகர்த்தா சிவபெருமான் மட்டுமே.

அதனால் ஒருவர் ஆண் குழந்தை வேண்டும் அல்லது பெண்குழந்தை வேண்டும் என்றால் சிவபெருமானை வழிபட வேண்டும். அவர்தான் சிருஷ்டிகர்த்தா என்பதால் கேட்டதை கொடுக்கும் வல்லமை அவருக்கு மட்டுமே உண்டு என்பதை சொல்கிறார் திருமூலர்.

**குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைதன் கூட்டிட்டால்**
**அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்**
**இயக்கில்லைப் போக்கில்;ல ஏனென்ப தில்லை**
**மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.**[6]

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைதன் கூட்டிட்டால் என்ற இந்தப் பாடலில் திருமூலர் சொல்லியிருக்கும் தத்துவம் மிகவும் சிறந்தது மட்டுமல்ல உயர்ந்ததும் ஆகும்.

குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது என்பதால், முட்டையை காக்கையின் கூட்டிற்குள் இட்டுவிடுவது வழக்கம். தன்னுடைய முட்டைக்கும் குயிலின் முட்டைக்கும் வித்தியாசம். தெரிந்தாலும், அதை காக்கைகள் கண்டுகொள்ளாமல் அடைகாத்து வளர்த்து வருவதுண்டு. காட்டில் மிகச் சாதாரணமாக நடந்துவரும் இந்த விஷயத்தை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. ஆனால், இந்த தத்துவத்தை வாழ்வில் பயன்படுத்தி வாழ வேண்டும் என்பதுதான் திருமூலரின் விருப்பம்.

அதுபோலத்தான் பெண் உடலில் இருக்கும் கர்ப்பப்பைக்குத் தேவை கருமுட்டை மட்டுமே. அது இயற்கையாக சினைக்குழாய் வழியாக வந்தது அல்லது செயற்கை முறையில் வந்தது என்றாலும் ஏற்றுக்கொள்ளவே செய்யும். செயற்கை குழாய் மூலம் உருவாக்கி வந்தது என்றாலும் கர்ப்பப்பை என்பது காக்கையின் கூட்டைப்போன்றே எந்தப் பாகுபாடும் காட்டாது.

**முடிவுரை:-**

இந்த உண்மை மிக சமீப காலத்தில், அதாவது முப்பது வருடம் முன்னதாகத்தான் இந்த உலகத்துக்கு தெரிய வந்தது. ஆனால் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருமூலர் இந்த ரகசியத்தை அறிந்து இருந்தார் என்பது மாபெரும் ஆச்சர்யம்.

**மேற்கோள் நூல்கள்**

1. சிவமல்லிகா, திருமந்திரமும் வேதாத்திரியமும், ப.6
2. ஜெயம் கண்ணன், திருமந்திரத்தில் மருத்துவம், ப.64
3. மணிவாசகன், திருமந்திரம் மூலமும் உரையும், ப.59
4. கோ.விசயராகவன், திருமந்திரத்தில் ஆன்மீக நெறிகள், ப.67
5. மணிவாசகன், திருமந்திரம் மூலமும் உரையும், ப.174
6. மேலது, ப.175

**துணைநூற்பட்டியல்**

1. ஜெயம் கண்ணன், திருமந்திரத்தில் மருத்துவம், கர்ப்பரக்ஷாம்பிகை மகப்பேறு மையம், கோடம்பாக்கம், சென்னை - 24, முதற்பதிப்பு - 2008.
2. மணிவாசகன், திருமந்திரம் மூலமும் உரையும், ராமையா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை - 14, முதற்பதிப்பு – 2010.
3. சம்பந்தம், திருமந்திர விருந்து, திருவரசு புத்தக நிலையம், தியாகராய நகர், சென்னை - 17, முதற்பதிப்பு – 1990.
4. சிவமல்லிகா, திருமந்திரமும் வேதாத்திரியமும், திருமந்திரம் அருட்சபை அறக்கட்டளை, K.K. நகர் திருச்சி -21 முதற்பதிப்பு – 2018.
5. விசயராகவன். கோ, மகாலட்சுமி. தி, திருமந்திரத்தில் ஆன்மீக நெறிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-13 முதற்பதிப்பு- 2017.